1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 54, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

54—

கூட்டுறவுத் தேர்தலில் வாக்காளர் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கல்.

*11114—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

வரவிருக்கிற கூட்டுறவுத் தேர்தலில் வாக்காளர்களுக்கு புகைப் படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவுத் தேர்தல்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கும் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை. எனினும், நெசவாளர், பால் உற்பத்தியாளர், வீட்டு வசதி மற்றும் வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு அவர்கள் உறுப்பினர்களாக உள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் பொதுவாக பல்நோக்குடைய (Multi-Purpose), புகைப்படம் ஒட்டிய ஒரு அடையாள அட்டை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் கடைசி முறையாகத் தமிழகத்தை ஆண்டபொழுது, அவசரக் கோலத்திலே ஒரு கூட்டுறவுத் தேர்தலை அரைகுறையாக நடத்தினார்கள். அப்படி நடத்துகிற பொழுது கூட்டுறவு விதிகளையே தலைகீழாக மாற்றி விட்டார்கள். 100 ரூபாய் கொடுத்து பங்குதாரராக வேண்டுமென்று சொன்னால் 10 ரூபாய் கொடுத்தால் போதும் ; பங்குதாரர் ஆவதற்கு அந்த இரசீதிலே கையெழுத்து போட வேண்டுமென்ற அவசியமில்லை ; நுழைவுப் பதிவேட்டிலே கையெழுத்து போட வேண்டுமென்ற அவசியமில்லை என்றெல்லாம் மாற்றப் பட்டிருக்கின்றபொழுது ஒரு வாக்காளர் உண்மையான வாக் காளரா அல்லது போலி வாக்காளரா என்று கண்டுபிடிப்பதற்கு

[1993 பிப்ரவரி 10

வேறு வழியில்லாமல் இருக்கிறது. எனவே, புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்பட்டால்தான் போலி வாக்காளர்களைத் தவிர்க்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லியதைப் பார்த்தால், அது அடையாளம் மாறியதாலே ஏற்பட்ட தவறு அல்ல ; அன்றைக்கிருந்த அரசாங்கம் விதிகளை மாற்றியதாலே ஏற்பட்ட தவறினால் பல குழப்பங்கள் அன்றைக்கு நடந்தன. அவைகளைக் களைந்தெறிவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அனைத்துச் சட்டத் திருத்தங்களையும் இப்பொழுது கொண்டு வந்திருக்கின்றோம். ஆகவே, அப்படிப்பட்ட தவறுகள் இந்த ஆட்சியில் நடக்காமல் பார்த்துக் கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களில், கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய படிக்காதவர்களும் கூட வாக்களிக்கிறார்கள். அந்த வாக்காளர்கள் வாக்களிக்கின்றபொழுது வேட்பாளர்களுக்கு எண்களாகச் சின்னங்களைத் தருகிறார்கள். அதற்கு மாற்றாக அவர்களுக்கு சின்னமாகவே தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அரசாங்கத்தில் இப்படிப்பட்ட பரிசீலனை எதுவும் இல்லை. அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட எண்ணம் வருமானால், அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காரியங்களானாலும், செம்மையாக நேர்மையாக நடைபெற வேண்டும் என்று எண்ணுகிற புரட்சித் தலைவியின் ஆட்சியிலே-இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கங்களில் தி.மு.க. காரர்கள், 10 முறை, 15 முறை** ஓட்டுப் போடுவதை நாம் கண்டிருக்கிறோம். ஆகவே, அவற்றைப் புறக்கணிக்கும் வகையிலே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது; அதைத் தவிர்க்கவும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : அவற்றைத் தவிர்க்கும் வகையிலே, ஓட்டளிப்பவர்களுக்கு பொதுத் தேர்தலில் மையிடுவதைப்போல, இதற்கும் மையிடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சி காலத்தில், கூட்டுறவுத் தேர்தல்களில் என்னென்ன தில்லுமுல்லுகள் நடைபெற்றன என்பதை இந்த அரசு அறியும். அப்படிப்பட்ட எந்தவிதமான தில்லுமுல்லுகளும் நடக்காமல் இருக்க புரட்சித் தலைவியின் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண். 55, திரு. சி. சுவாமிநாதன் ; இருக்கையில் இல்லை.

வினா எண். 56. திரு. என். ஆர். சிவபதி; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

56—

விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் டிராக்டர் வழங்குதல்.

*9797 — திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் டிராக்டர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எதன் அடிப்படையில் மானியத் தொகை வழங்கப்படும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.